# அப்போஸ்தலர்கள் - யாக்கோபு, சீமோன் மற்றும் யூதாஸ்

## லூக்கா 6:12-16

**லூக்கா 6:12-16, அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே.**

**முதல் குழுவினர்:**

1. சீமோன் என்னும் பேதுரு
2. அந்திரேயா
3. யாக்கோபு
4. யோவான்

பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானின் பெயர்கள் பட்டியலில் மாறிமாறி இடம்பெற்றுள்ளது. பேதுருவின் பெயர் எல்லாவற்றிலும் முதலில் இடம்பெறுகிறது. ஆனால் இவர்களின் பெயர்கள் எப்போதுமே முதல் குழுவாகவே கருதப்படுகிறது.

**இரண்டாம் குழுவினர்:**

1. பிலிப்பு

2. பர்த்தொலொமேயு (அ) நாத்தான்வேல்

3. மத்தேயு

4. தோமா

இந்த இரண்டாவது குழுவும் எல்லா பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.

பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு மற்றும் தோமா ஆகிய நால்வரின் பெயர்கள் அடிக்கடி இடம் மாறி இடம்பெற்றாலும், இந்த இரண்டாம் குழுவில் பிலிப்புவின் பெயரே எப்போதும் முதலாவதாக இடம்பெறுகிறது.

**மூன்றாம் குழுவினர்:**

1. அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு

2. செலோத்தே என்னப்பட்ட சீமோன்

3. யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ்

4. யூதாஸ்காரியோத்து

எல்லா பட்டியலிலும் ஒன்றுபோலவே இடம்பெறுகிறது. நடுவில் இருக்கும் செலோத்தே என்னப்பட்ட சீமோன் மற்றும் யாக்கோபின் குமாரனாகிய யூதாஸ் ஆகிய இருவரின் பெயர்களும் அவ்வப்போது இடம் மாறி இடம்பெறுகிறது.

ஆனால் அப்பேயுவின் குமாரனாகிய யாக்கோபின் பெயர் முதலிலும் யூதாஸ்காரியோத்தின் பெயர் கடைசியிலும் இடம்மாறாமல் இடம்பெற்றுள்ளது.

## சின்ன யாக்கோபு

15ஆம் வசனத்தில் இடம்பெற்றுள்ள சீஷர் பட்டியலில் 9ஆம் இடத்தில் இடம்பெற்றுள்ளது இந்த அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.

அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு.

இவருடைய பெயரில் பல நபர்கள் இருந்துள்ளனர்:

- செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு. இவர் யோவானின் சகோதரர்.

சுவிசேஷத்தின் பல்வேறு இடங்களில் யாக்கோபு இடம்பெறுவதால் இவர் அதிகம் பரீட்சையமானவர்.

- இயேசுவின் சகோதரரான இன்னொரு யாக்கோபு.

யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த யாக்கோபு என்னும் இயேசுவின் சகோதரர் இவர்.

இவர் பின்பாக எருசலேம் மாநாட்டின் தலைவராக மாறி, யாக்கோபு நிருபத்தை எழுதினார்.

அல்பேயுவின் குமாரனாகிய இந்த யாக்கோபு யார் என்பது சற்று குழப்பமாயிருக்கிறது. அல்பேயு யார் என்பதே நமக்கு தெரியாது.

**மாற்கு 15:40, சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்,**

“ஜேம்ஸ் தி மைக்ரோஸ்”

“சின்ன யாக்கோபு” என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.

**“சிறியது,” “சின்ன,” “குறுகிய” என்றால் என்ன?**

அது அவருடைய சரீர தோற்றமாக இருக்கலாம்.

அவர் ஒருவேளை சிறிய உருவம் கொண்டவராய் இருந்திருக்கலாம்.

அவர் வயதில் சிறியவராய் இருந்திருக்கலாம். அவர் வயது முதிர்ந்தவராய் இருந்து, அவரை சிறிய யாக்கோபு என்று அழைக்க வாய்ப்பில்லை. அவருடைய

வயதில் இருக்கும் வித்தியாசத்தை அடிப்படையாய் வைத்து அவர் அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம்.

இவர் பின்னணியில் நின்று செயல்படுபவர் என்பதால் இவரை "சின்ன யாக்கோபு" என்று அழைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது.

எது என்று நம்மால் உறுதியாய் சொல்லமுடியாது. ஆனால் இவைகள் எல்லாவற்றின் கலப்பாகவும் அவர் இருந்திருக்கலாம். நாம் அவரை சிறிய அமைதியான ஒரு நபராகவே மனதில் நினைத்துக்கொள்வோம்.

"சின்ன யாக்கோபு" என்பது அவரை கூப்பிடும் பெயராய் இருக்கலாம். இவர் மற்றெல்லோரைக் காட்டிலும் திறமையானவராய் இல்லாமல் இருந்திருக்கக்கூடும். ஆனால் நம் தேவன் கதாநாயகர்களை சார்ந்து இருக்கிறவர் அல்ல.

அவரை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

**மாற்கு 2:14, அவர் நடந்துபோகையில், அல்பேயுவின் குமாரனாகிய லேவி ஆயத்துறையில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.**

அப்போஸ்தலர் மத்தேயுவும் (லேவி என்று அழைக்கப்பட்டவர்; ஆயக்காரனாயிருந்து, பின் சீஷனாக மாறியவர்) அல்பேயுவின் குமாரனாக அடையாளப்படுத்தப்படுகிறார்.

**இந்த யாக்கோபு ஒருவேளை மத்தேயுவின் சகோதரனாய் இருக்கக்கூடுமோ?**

இருக்கலாம்.

ஆனால் இந்த இரண்டு அல்பேயுவையும் வேதம் வேறுபடுத்திக் காண்பிக்க முயலவில்லை. ஆனால் இருக்கலாம்.

அப்படி இருப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. ஏனெனில்,

பேதுருவும் அந்திரேயாவும் சகோதரர்கள்,

யாக்கோபும் யோவானும் சகோதரர்கள்.

யாக்கோபும் மத்தேயுவும் ஏன் சகோதரர்களாயிருக்கக்கூடாது?

ஆயினும் இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பதை நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். சுவிசேஷத்தில் இந்த இருவருக்கும் தொடர்பு இருப்பதாக எந்த ஆதாரமும் இல்லை.

புதிய ஏற்பாடு இவரைக் குறித்து எதுவும் சொல்லவில்லை.

இவரைக் குறித்து நமக்கும் எதுவும் தெரியாது என்பதே சுவாரஸ்யமான ஒன்று. அவர் எந்த அங்கீகாரத்தையும் தேட முயலாதவர். அவர் பெரிய தலைமைத்துவம் எதையும் பொறுப்பேற்கவில்லை. குதர்க்கமான கேள்விகள் எதையும் கேட்கவில்லை. வழக்கத்திற்கு மாறான, எந்த செய்கையும் செய்யவில்லை. அவருடைய பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய வாழ்க்கையும் பிரயாசமும் முழுவதுமாய் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

**சின்ன யாக்கோபின் சாதனைகள்:**

யாக்கோபு சீஷனாயிருக்கும்படிக்கு இயேசுவினால் தெரிந்துகொள்ளப்படுகிறார். இயேசு பரமேறிச் சென்ற பின்பு, மற்ற 11 அப்போஸ்தலரோடுங்கூட மேல்வீட்டில் இவர் இருந்துள்ளார். உயிர்த்தெழுந்த இரட்சகரை சாட்சியிட்ட முதல் சீஷனாய் இவர் இருந்திருக்கக்கூடும்.

**1 கொரிந்தியர் 15:7, பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார்.**

இவருடைய சாதனைகள் என்ன என்பது நமக்கு தெரியவில்லையென்றாலும் மற்ற பிரபலமான அப்போஸ்தலரோடு இருந்துள்ளார். இருப்பினும் பன்னிருவரில் ஒருவராய் இருப்பது சாதாரண காரியம் இல்லை.

பெந்தெகொஸ்தே நாளுக்கு பின் இவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்பொருட்டு பெர்சியாவுக்கு (தற்போதைய ஈரான்) கடந்துபோனார் என்று வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகிறது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கு அதிகாரத்திலுள்ளவர்களினால் எதிர்ப்பு ஏற்பட்டதினால் அவருடைய தேவனாகிய கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதுபோலவே இவரையும் சிலுவையில் அறைந்துள்ளனர்.

இஸ்லாமிய மார்க்கம் ஈரானின் ஆதிக்க மார்க்கம். எந்த விதத்திலும் திறமையில்லாத எளிமையான மனிதர்களையே தேவன் பயன்படுத்துகிறார். இங்கேயும் ஓர் அமைதியான, அறியப்படாத ஓர் யுத்த வீரன். சின்ன யாக்கோபு

பெரிய பிரசங்கியாராக மாறி, அற்புதங்களை நடப்பித்து, பிசாசுகளைத் துரத்தி, வியாதியஸ்தர்களை சுகமாக்கி, தான் போதித்த செய்தியை நிருபித்தார். இவர் கர்த்தருடைய செய்தியை உண்மையாய் பிரசங்கித்தார். கர்த்தருடைய வார்த்தை வெறுமனே திரும்புவதில்லை என்று ஏசாயா சொல்லுவது போல, இவருடைய செய்தி கனி கொடுத்தது. இவருடைய இரத்தசாட்சிக்கு காரணமாகும் வகையில் அந்த செய்தியின் வார்த்தைகள் வல்லமையுள்ளதாயிருந்தது.

மற்றுமொரு சுவாரஸ்யமான சிந்தனை.

**யோவான் 19:25, இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்.**

இந்த கிலெயோப்பா என்பது அல்பேயுவின் மற்றொரு பெயர் என்று சில நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒருவேளை யாக்கோபு மரியாளின் சகோதரியுடைய குமாரன் என்றால், அவர் இயேசுவுக்கு ஒருவகையில் சொந்தமாயிருக்கவேண்டும்.

**இந்த யாக்கோபு இயேசுவின் சொந்தமா?**

**இந்த யாக்கோபு மத்தேயுவின் சகோதரரா?**

நமக்கு தெரியாது.

அது தேவனுக்கு ஒரு பொருட்டல்ல.

ஜனங்கள் தங்கள் பெயரோடு குடும்பப்பெயரையும், அல்லது சில பெரிய பெயர்களையும் சேர்த்து மற்றவர்களின் கவனத்தை தன் பக்கமாய் ஈர்க்க முயலுகின்றனர். ஆனால் அடையாளமே இல்லாதவர்களை தேவன் பயன்படுத்துகிறார்.

தேவனுடைய ராஜ்யத்தில் இந்த அப்போஸ்தலர்கள் உண்மையான வேலையாட்கள் இல்லை. கிறிஸ்துவே கிரியை செய்கிறவர். அவர்களுல்லாம் பயன்படுத்தப்பட்ட கருவிகளே.

அப்போஸ்தலர்களுடைய வம்சாவழிமுறைகள், யுக்திகள் ஆகியவற்றிலிருந்து நாம் சில காரியங்களைத் தெரிந்துக்கொள்ளமுடியும். அப்போஸ்தல நடபடிகளை வாசிக்கும்போது, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியவர்களைத் தவிர, நாம் வேறு யாரையும் குறித்து அறிந்துக்கொள்ள

முடியாது. பேதுருவும் யோவானும் முதற்பகுதியில் இடம்பெறுகின்றனர். அதின் இரண்டாம் பெரும்பகுதி பவுலைக் குறித்தும் மற்ற அப்போஸ்தலர்களைக் குறித்தும் குறிப்பிடுகிறது.

ஆகையினால், அவைகளைத் தாண்டி வேறு யாரையும் குறித்து நாம் அறிந்துகொள்ள முடியாது.

**ஏன்?**

அழைக்கப்பட்ட மனிதர்கள் ஒரு பொருட்டல்ல; அவர்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியினாலே நடத்தப்பட்டவர்கள். உலகத்திற்கு தேவனுடைய சுவிசேஷத்தை அவர்கள் கொண்டு சென்றார்கள் என்பதை மட்டும் அவர்களைக் குறித்து நாம் அறிந்து கொள்வது போதுமானது. அதற்கு பின்பாக அவர்கள் காணாமல் போய்விட்டார்கள்.

கிறிஸ்துவின் வல்லமையையும் வார்த்தையின் வல்லமையையும் வேதம் முக்கியத்துவப்படுத்துகிறது. அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தனர் என்பதே நாம் அறிந்துக்கொள்ள வேண்டியது.

பாத்திரம் ஒரு பொருட்டல்ல; அதின் எஜமானரே முக்கியம். அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும் மற்ற அப்போஸ்தலர்களைப் போல ஒருவர்தான்.

அவர் தேவனுடைய அன்புக்கு நேராய் ஈர்க்கப்பட்டார். தன்னுடைய சுவடுகள் எதையும் வைக்காமல் தேவனுடைய நாம மகிமைக்காய் மட்டுமே வாழ்ந்தார்.

பாலோகத்தில் ஒரு பதிவு இருக்கிறது. அவர் தற்போது பரலோகத்தில் ஒளிர்கிறார். பரம எருசலேமின் ஒரு வாசலின் அஸ்திபாரத்தில் அவருடைய பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

## செலோத்தே என்னப்பட்ட சீமோன்

சீமோன், “செலோத்தே” என்றும் அழைக்கப்பட்டார்.

மத்தேயுவும் மாற்கும் இவரை கானானியன் என்று அழைக்கின்றனர். லூக்கா இவரை செலோத்தே என்று அழைக்கிறார்.

## மத்தேயுவும் மாற்கும் ஏன் “கானானியன்” என்று பயன்படுத்துகிறார்கள்?

பாரம்பரியமான தோல்சுருள்களெல்லாம் “கானானியோஸ்” என்று பயன்படுத்துகிறது. இந்த வார்த்தை எபிரெய மொழிக்குரியது. எபிரெயத்தின் மூல வார்த்தையிலிருந்து கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

“கானா” என்ற எபிரெய வார்த்தைக்கு “பொறாமைப்படுதல்” அல்லது “தாகங்கொள்ளுதல்” என்று அர்த்தம்.

எபிரெயத்தில் இவ்வார்த்தை நியாயப்பிரமாணத்திற்காய் வைராக்கியம், தாகம், வாஞ்சை கொண்டவர்களைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே “கானானியோஸ்” என்னும் வார்த்தை எபிரெயத்திலிருந்து தோன்றியிருக்கிறது.

“செலோத்தே” என்ற வார்த்தை கிரேக்கத்தில் “வைராக்கியம்” என்று பொருள்படுகிறது. அதிலிருந்தே செலோத்தே என்ற வார்த்தை தோன்றியுள்ளது.

கிரேக்கத்திலும் இதே வார்த்தை தான் உபயோகப்படுத்தப்படுகிறது.

இரண்டு வார்த்தைகளும் இந்த நபரையே குறிக்கின்றது. இந்த மனிதன் தேவனுடைய கற்பனைகளின் மீது வாஞ்சையும் வைராக்கியமும் கொண்டவர். இந்த வார்த்தை பயன்பாடுகள் இந்த உண்மையைக் காட்டுகிறது.

இந்த இரண்டு வார்த்தைகளும் இவர் தேவனுடைய கற்பனைகளில் வாஞ்சையுள்ள மனிதர் என்பதை மட்டும் தெளிவாய் காட்டுகிறது.

பெயர் தலைப்பை இவர் தன் வாழ்க்கை முழுவதும் சுமந்தார். அது அவருடைய புவியியல் அமைப்போடு தொடர்புடையது அல்ல; மாறாக, இது சீமோன் ஒரு வைராக்கியமுள்ள, தீவிரமான, வாஞ்சையுள்ள ஒரு யூத கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை தெளிவுப்படுத்துகிறது.

## யூதர்களில் பொதுவாக நான்கு பிரிவினர்கள் இருந்தனர்.

**பரிசேயர்கள்**, நியாயப்பிரமாணத்திற்கும் மார்க்க சடங்காச்சாரங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

**சதுசேயர்கள்** என்று இன்னொரு கூட்டத்தினர் வாழ்ந்தனர். இவர்கள் மார்க்கரீதியாய் சற்று தளர்வுள்ளவர்கள்.

**எஸினியர்கள்** என்று ஒரு கூட்டத்தினர் வாழ்ந்தனர். இவர்கள் துறவிகளாய் வாழ்ந்தவர்கள். இவர்கள் மற்ற மக்களிடமிருந்து தங்களை வேறுபிரித்துக்கொண்டு வனாந்திரத்தில் தனிமையில் வாழ்ந்தவர்கள். நகரத்தின் எந்த சுகத்தையும் அனுபவிக்க விரும்பாமல் கடுமையான வாழ்க்கை முறையை கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள். இவர்கள் மடத்தில் வாழும் துறவிகள் போல வாழ்ந்தார்கள்.

**செலோத்தியர்கள்**, கடைசி குழுவினர். இது ஒருவகையான அரசியல் ரீதியான குழு. இவர்கள் ரோமர்களை முற்றிலும் வெறுத்தனர்.

செலோத்தியர்கள் யூத மார்க்கத்தின் மீது திணிக்கப்படும் அனைத்து புறஜாதி சடங்குகளையும் வெறுத்தனர். ரோமர்கள் இதை குற்றமனசாட்சியுடன் பார்த்தனர்.

இவர்கள் ரோமர்களை வெறுத்தனர். அதற்கு முன்பாக ஆட்சிசெய்த கிரேக்கர்களையும் வெறுத்தனர். இவர்கள் முரட்டாட்டத்தில் கர்ப்பந்தரித்தவர்கள்.

இவர்கள் அரசியல் தீவிரவாதிகள், கொலை பாதகர்கள். இவர்கள் மக்கபேயர் காலக்கட்டத்தில் கிரேக்கர்கள் இஸ்ரவேலை ஆளுகை செய்த தருணத்தில் வாழ்ந்தவர்கள்.

யூதர்கள் போராடி சோர்ந்து போயிருந்தனர். ஆலயம் தீட்டாக்கப்பட்டது. யூத மார்க்கத்தையும் ஆராதனை சடங்காச்சாரத்தையும் கனவீனப்படுத்தும் விதத்தில் ஆலயத்தின் பலிபீடத்தின் மீது பன்றி பலியிடப்பட்டது.

மக்கபேயர்களின் கிளர்ச்சி துவங்கியது.

**1 மக்கபேயர் 2:50, ஆதலால் என் மக்களே இப்போது திருச்சட்டத்தின்பால் பற்றார்வம் கொண்டிருங்கள்: நம் மூதாதையரின் உடன்படிக்கைக்காக உங்கள் உயிரைக் கொடுங்கள்.**

புறஜாதியரின் செய்கைகளை வெறுப்பதற்கு இதுபோன்ற அழைப்பை பெற்றுக்கொண்ட யூதர்களே தேசத்தை ஆக்கிரமித்திருந்தனர். இவர்கள் கடினத்திலும் கடினமானவர்கள்.

இவர்கள் பரிசேயரிலும் அதிகமான பரிசேயராய் வாழ்ந்தனர். நியாயப்பிரமாணத்தை நேரடியாய் வியாக்கியானம் செய்தனர். அதுமட்டுமின்றி, நியாயப்பிரமாணத்தை உள்ளவிதமாய் வியாக்கியானம் செய்தது மட்டுமின்றி,

அதின்படி வாழத்தவறுகிறவர்கள் கொல்லப்படவேண்டும் என்றும் உறுதியாய் நம்பினர்.

இவர்கள் நியாயப்பிரமாணத்தை நேரடியாய் கடைபிடிப்பதை அதிகமாய் வலியுறுத்தினர். ரோம சாம்ராஜ்யத்தையும் மற்ற புறஜாதி தேசங்களையும் வீழ்த்தி, இஸ்ரவேலின் ராஜ்யத்தை மறுசீரமைத்து, சாலமோன் மற்றும் தாவீதின் நாட்களில் இருந்த மகிமையை திரும்பிவரப்பண்ணும் மேசியாவையே அவர்கள் எதிர்பார்த்தனர்.

இந்த முரட்டுத்தனமான தேசபக்தியாளர்கள் ரோமர்கள் பிடியிலிருந்து இஸ்ரவேலை விடுவிக்க, **சமாலாவின் யூதாஸ்** என்பவரின் தலைமையில் ஒன்று திரண்டனர். இவர்கள் கிளர்ச்சி செய்யத் துவங்கினர். இவர்களின் சில செய்கைகள் நம்மை ஆச்சரியப்படுத்தும்.

யூதாஸைத் தவிர்த்து மற்ற அப்போஸ்தலர்களின் சொந்த ஊரான கலிலேயாவையே இவர்கள் தங்கள் தலைமைச் செயலகமாய் கொண்டிருந்தனர். இவர்கள் அடிக்கடி கிளர்ச்சி செய்தனர். தீவிரவாத செயல்களில் ஈடுபட்டனர். இவர்களைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டிய தகவல்களை யோசிபஸ் என்னும் அந்நாட்களில் வாழ்ந்த சரித்திர நிபுணர் நமக்குத் தருகிறார்.

இஸ்ரவேல் தேசம் ரோம ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இவர்கள் பொங்கும் எரிமலை என்பதை யூதர்களே அறியாதிருந்தார்கள். ரோமர்களை தங்கள் தேசத்தை விட்டு வெளியேற்றுவதையே குறிக்கோளாய் கொண்டு செயல்பட்டனர். அவர்களை எல்லா விதத்திலும் எதிர்த்தனர். பல ஆண்டுகளாக யூதனல்லாத இடுமேய இனத்தைச் சேர்ந்த ஏரோது ராஜா இரண்டு தேசங்களிடையே ஒரு சமாதானத்தை ஏற்படுத்தி, ஆட்சி செய்தார். தன்னுடைய ஆளத்துவத்தையும் திறமைகளையும் அடிப்படையாகக் கொண்டும், ரோம ராஜ்யத்தின் துணையோடும் இதைச் செய்தார்.

கி.மு. 4இல் ஏரோது மரணமடைந்தார். இராஜ்யம் அவருடைய குமாரர்களால் பங்கிடப்பட்டது.

பிலிப்பு வடகிழக்கு பகுதியை எடுத்துக்கொண்டான்.

அந்திபாஸ் கலிலேயாவை எடுத்துக்கொண்டான்.

யூதேயாவையும் சமாரியாவையும் ஆர்கேலியஸ்க்கு விட்டுவிட்டனர்.

இந்த புதிய ஒழுங்கு ரோமர்களால் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரே இஸ்ரவேல் தேசம் சிதறுண்டது.

இவர்கள் புறஜாதி அதிபதிகளும் ரோம அதிபதிகளும் தங்கள் தேசத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று எண்ணினர். கலிலேயாவில் கலகம் பற்றியெறிய ஆரம்பித்தது. **சமாலாவின் யூதாஸ்** அதை முன்நின்று நடத்தினார்.

ரோம அதிகாரம் அந்த கிளர்ச்சியை உடைத்தது. ஆனால் செலோத்தியர்கள் தங்களை பலப்படுத்திக்கொண்டனர். தெற்கு ராஜ்யமான யூதேயாவை ஆட்சிசெய்த ஆர்கேலியஸ், ஆட்சிக்கு தகுதியற்றவன் என்று எண்ணிய ரோம ராஜ்யம், அவனுக்கு பதிலாக க்விரினியஸை அரசனாக ஏற்படுத்தியது.

க்விரினியஸ் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவரே மக்கள் கணக்கெடுப்பை அறிமுகப்படுத்தினார். இயேசு பிறக்கும்போதும், மரியாளும் யோசேப்பும் குடிமதிப்பு எழுதப்படுவதற்காய் கடந்துபோவதை நாம் பார்க்கமுடியும். வரிவசூலிப்பதற்காகவே இந்த குடிமதிப்பு எழுதுவதை இவர் அறிமுகப்படுத்தினார். செலோத்தியர்களைப் பொறுத்தவரையில் இந்த செய்கை மற்றுமொரு அநீதியின் அடையாளம் என்பதினால் சமாலாவைச் சேர்ந்த யூதாஸின் தலைமையில் புனிதப்போர் துவங்கப்பட்டது.

இந்த முறையும் ரோமர்கள் இவர்களின் முயற்சியை தவிடுபொடியாக்கினர். யூதாஸை கொலைசெய்தனர். இம்முறை செலோத்தியர்கள் வெளிப்படையாய் தாக்குவதை விட்டுவிட்டு மறைமுகமாய் தீவிரவாதத்தை கையிலெடுத்தனர். இவர்கள் **சிகாரி** என்றும் அறியப்பட்டிருந்தனர். “**சிகே**” என்பது ஒருவகையான கத்தி. அதை தன் வஸ்திரத்தில் மறைத்து வைத்து, ரோமர்களுக்கு பின்பாக நின்று, அவர்களின் விலாவிலே பாய்ச்சி, அதை அவர்களின் இருதயம் வரைக்கும் உள்நுழைத்து, கொலை செய்வது இவர்களின் வழக்கம்.

**லூக்கா 22:38, அதற்கு அவர்கள்: ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது என்றார்கள். அவர்: போதும் என்றார்.**

இவர்கள் தங்களை கொரில்லா யுத்தத்திற்கு உட்படுத்தி, எரிப்பதிலும் சூறையாடுவதிலும் ஈடுபட்டனர். கலிலேயாவில் மறைந்து வாழ்ந்தனர். சிலவேளைகளில் ரோமர்களுக்கு கைக்கூலியாய் செயல்பட்ட தங்களுடைய சொந்த மக்களையே கொலை செய்ய நேரிட்டது. ஜோசிபஸ் என்னும் யூத

சரித்திர நிபுணர், செலோத்தியர்களின் தலைவரான இந்த **சமாலாவின் யூதாஸைக்** குறித்து பதிவிட்டுள்ளார்.

அவர் சொன்னதாவது, "நான்காம் யூத தத்துவத்தின் ஆசிரியர் கலிலேயாவைச் சேர்ந்த யூதாஸ். செலோத்தியர்கள் தங்கள் சுதந்திரத்தை விரும்பி, தேவன் மட்டுமே தங்களின் ஆளுநர் என்றனர். இவர்கள் மரணத்தைக் கண்டோ, தங்களின் பிள்ளைகள் சித்திரவதை அனுபவிப்பதைக் கண்டோ அல்லது நண்பர்கள் துன்புறுத்தப்படுதலைக் கண்டோ அஞ்சி பின் வாங்குபவர்கள் இல்லை. அவர்களுக்கு பயந்து எந்த மனிதனையும் கடவுளுக்கு நிகராக்க விரும்பவில்லை.

இவர்களின் இந்த அசைக்கமுடியாத வைராக்கியம் அநேகரால் அறியப்பட்டிருந்தது. அதைக் குறித்து நான் அதிகம் பேசவில்லை. அவர்களைக் குறித்து அதிகம் பேசினாலும் யாரும் நம்பாமல் போய் விடுவாரோ என்று நான் அஞ்சவில்லை. ஆனால் கடுமையான வலியின் மத்தியில் அவர்கள் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பை குறைவாய் சொல்லிவிட்டேனோ என்றே அஞ்சுகிறேன்."

இந்த மக்கள் மிகவும் வைராக்கியம் கொண்டவர்களாதலால் அவர்களைக் குறித்து கொஞ்சம் சொன்னாலே போதும். அவர்கள் மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறவர்கள். அவர்களைச் சுற்றியுள்ள மக்கள் அவர்களுக்கு எதிராக எழும்பி அவர்கள் மேல் விழுந்தாலும், அது அவர்களின் தீர்மானத்தை கொஞ்சமும் தணிக்காது.

அவர்கள் மரிப்பதற்கு யோசித்ததில்லை. அது எந்தவித மரணமானாலும் அவர்களின் பிள்ளைகள் மற்றும் நண்பர்கள் சித்திரவதை செய்யப்பட்டாலும் அவர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. நீங்கள் அவர்களை துன்புறுத்தலாம், அவர்களை கொலை செய்யலாம். ஆனால் அவர்களின் வைராக்கியத்தை மாற்ற முடியாது.

சீமோன் அதில் ஒருவர். கி.பி. 70இல் ரோமானியர்கள் **டைட்டஸ் வெஸ்பாஸியனின்** தலைமையில் எருசலேமை அழித்தபோது, ஒரு இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்ட அளவிற்கு யுத்தம் பயங்கரமாயிருந்தது. அதில் அதிகமாய் கொல்லப்பட்டவர்கள் இந்த செலோத்தியர்கள் என்று சில சரித்திர நிபுணர்கள் சொல்லுகின்றனர்.

எருசலேம் முற்றிக்கையிடப்பட்டபோது அதின் குடிகள் பஞ்சத்தினாலேயே மரணத்தை நெருங்கியது. சூழ்நிலை முற்றிலும் கைவிடப்பட்டதாய் தோன்றியது. அத்தருணத்தில் உள்நாட்டில் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. செலோத்தியர்களும் மற்ற கொலைக் குழுவினரும் தேசத்தின் அழிவுக்கு காரணமாகி, அதைக் காட்டிக்கொடுக்கிற நபர்களை கொலை செய்யத் துணிந்தனர். பட்டணம் முழுவதுமாய் அழிக்கப்படுவதற்கு முன், உள்ளேயிருந்த துரோகிகளை இவர்களே கொலை செய்தனர். இவர்கள் ரோமானியர்களை கண்மூடித்தனமாய் வெறுத்தனர். அவர்களோடு தொடர்புடைய எல்லோரையும் வெறுத்தனர். அவர்களின் இந்த கண்மூடித்தனமான வெறுப்பு, பட்டணத்தின் அழவிற்கு காரணமானது.

ரோம ராணுவம் பட்டணத்திற்குள் புகுந்து அதை முற்றிக்கையிட்டபோது, அந்த பட்டணத்திற்குள் போகும் அனைத்து வாழ்வாதாரங்களையும் தடைசெய்தனர். அதினால் மக்கள் வெளியேறுவார்கள் என்று எண்ணினர். பண்டைய நாட்களில் இவ்வாறே தேசங்கள் முற்றிக்கையிடப்பட்டது. இப்படியே பட்டணம் அழிக்கப்பட்டது.

பட்டணத்தை சுற்றி வளைத்து, அதின் வாழ்வாதாரங்களை நிறுத்தினர். மக்கள் பஞ்சத்தினால் மடியத் துவங்குவார்கள; மரணம் நேரிடத்துவங்கும்; அப்போது அவர்கள் பேச்சுவார்த்தைக்கு படிந்துபோகும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுவர். “பனிப்போர் பலம்” என்று நாம் அழைக்கும் பலவீனமான ஒரு கட்டத்திற்கு அவர்கள் ஆளாக்கப்படுவர். அவர்கள் அழிவின் நுணியில் இருக்கின்றனர் என்பதை அறிந்தவுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிப்பார்கள்.

அதுபோன்று சுமூகமான பேச்சுவார்த்தை நடத்தி தங்கள் ஜீவனைக் காக்க விரும்பிய மக்களும் எருசலேமில் இருந்தனர். செலோத்தியர்களோ அவர்களை அனுமதிக்கவில்லை. சுமூகமான பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்த யூதர்களை இந்த செலோத்தியர்கள் கொன்றுபோட்டனர். அதின் விளைவாய் அவர்களின் பட்டணமும் அதின் மொத்த குடிகளும் அழிக்கப்பட்டனர்.

ஜோசிபஸ் இப்படியாக எழுதுகிறார். “செலோத்தியர்கள் என்று பெயரிடப்பட்ட இந்த கூட்டம் தங்கள் பெயருக்கேற்றாற்போல் தங்கள் நற்காரியங்களில் வைராக்கியங்கொண்டவர்கள் என்றும் தவறான காரியங்களுடன் தாங்கள் ஒத்துப்போவதில்லை என்றும் அவர்களாகவே எண்ணிக்கொண்டனர்.” அவர்களின் வைராக்கியம் தவறான நம்பிக்கையில் ஊன்றியுள்ளது என்று ஜோசிபஸ் குறிப்பிடுகிறார்.

அவர்கள் கூண்டோடு அழிந்த சம்பவத்தை காட்டிலும் இந்த செலோத்தியர்களின் முட்டாள்தனத்தை வேறெதுவும் வெளிப்படுத்தமுடியாது. எருசலேம் தரைமட்டமாக்கப்பட்டபோது, பட்டணத்தில் ஒரு கூட்டம் தப்பித்து பட்டணத்திற்கு வெளியே மறைந்திருந்தது. அவர்கள் பட்டணத்திற்கு வெளியே மசோதா என்ற இடத்தில் தங்கியிருந்தனர். வனாந்திரத்தின் தெற்கு பக்கத்திலிருந்து ஏரோதின் அரண்மனையிருந்த இடம் அது.

"வெளியே தங்கியிருந்த இந்த யூத கூட்டத்திற்கு **எலெயேசர்** தலைமை தாங்கினார். இனி உயிர் தப்ப வழியே இல்லை என்றபோதில் எலேயேசர், யூதர்கள் அனைவரையும் அழைப்பித்து, அவர்களுக்கு அனல்பறக்கும் ஊக்கத்தைக் கொடுத்து, முதலில் ஒவ்வொரு யூதனும் தன்னுடைய சொந்த மனைவியையும் பிள்ளைகளையும் கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டார். அவர்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தனர். அவர்கள் மென்மையாய் தங்கள் மனைவிமார்களைக் கட்டியணைத்து, அவர்களின் பிள்ளைகளை முத்தமிட்டு, பின் இந்த இரத்தம்தெரிக்கும் செயலைச் செய்தனர் என்று ஜோசிபஸ் எழுதுகிறார். **தொள்ளாயிரத்து அறுபது பேர்** மரணமடைந்தனர். வெறும் இரண்டு பெண்களும் ஐந்து பிள்ளைகளுமே குகைகளில் தங்களை ஒளித்துக்கொண்டு தப்பித்தனர்."

ரோமர்களின் கைகளினால் கொல்லப்படுவதை விரும்பாத இந்த செலோத்தியர்கள் தங்கள் குடும்பங்களை தாங்களே கொல்லுமளவிற்கு வைராக்கியமானவர்கள். இதுவே சீமோன்.

சீமோனைக் குறித்து இப்போது சிந்தித்துப் பாருங்கள். இஸ்ரவேலர்களிடத்தில் வரியை வசூலித்து ரோம பேரரசிடம் ஒப்படைக்கும் மத்தேயுவுடன் இயேசுவுக்கு பின்னாக நடக்கிறார். மத்தேயு தன் ஜனங்களுக்கு துரோகம் செய்து, ரோமர்களுக்காக வேலை செய்து, மக்களால் அதிகம் வெறுக்கப்பட்ட ஆயக்காரக் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

சீமோன் தான் வைத்திருந்த அந்த கத்தியை எடுத்து மத்தேயுவின் இருதயத்தில் பாய்ச்சி அவன் அடைக்கலம் புகுந்த கிறிஸ்துவின் மேன்மையை புறக்கணித்திருக்கலாம்.

தேவன் இப்படிப்பட்ட ஒரு தீவிரவாதியை தெரிந்துகொண்டது ஆச்சரியப்படுத்துகிறது. தீவிரவாதி, கடுமையான விசுவாசமுள்ளவர், ஆச்சரியப்படுத்தும் வைராக்கியமும் தைரியமும் கொண்டவர், எதிர்மறையான

எண்ணம் கொண்டவர், உற்சாகமாய் தவறிழைப்பவர், செயல்படக்கூடிய மனிதர், உண்மையானவர், கடுமையானவர் என்று வகைப்படுத்தக்கூடிய இந்த சீமோனை தேவன் தெரிந்துகொண்டார்.

மத்தேயுவும் சீமோனும் இயேசுவின் பாதத்தில் தங்கள் இருதயங்களை இணைத்துக்கொண்டனர். அவர்களின் முரண்பாடான சுபாவங்கள், அன்பின் அக்கினியினாலே இணைக்கப்பட்டது. இது மகா சபையில் நடக்கக்கூடிய காரியங்களுக்கு அடையாளமாய் தென்படுகிறது. அங்கு பிரிவினைகள் தகர்க்கப்பட்டு, பேதங்கள் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு ஒன்றிணைக்கப்பட்ட விசுவாசமாய் மகிமையில் உயிர்த்தெழும். அங்கு யூதனென்றும், கிரேக்கனென்றும், பார்பேரினென்றும், சீத்தியனென்றும், அடிமையென்றும், சுயாதீனனென்றும் பிரிவினை இல்லாமல் அனைவரும் கிறிஸ்துவுக்குள்ளாயிருப்போம்.

சீமோனை யூதாஸ்காரியோத்தோடு ஒப்பிட்டு பார்க்கலாம். யூதாஸ் பணத்தை விரும்பினார். யூத இராஜ்யத்தை விரும்பினார். சீமோனோ ரோமர்களை வெளியேற்ற விரும்பினார். யூதாஸ் பொருளாசைக்காரன் என்பதினால், அவரோடு சேர்ந்து சுற்றுவது சீமோனுக்கு கடினமாய் தோன்றியிருக்காது. இயேசுவின் மேசியாத்துவமானது அரசியல் ரீதியானது என்று யூதாஸ் நம்பியிருந்தார். கடைசியில் இயேசுவையே காட்டிக்கொடுத்து விடுகிறார். ஏனெனில், அவர் எதிர்பார்த்த விதத்தில் காரியங்கள் நடைபெறவில்லை. அவர் சீமோன் எதிர்பார்த்தபடி, ரோமர்களை வெளியேற்றி, இஸ்ரவேலுக்கு மீட்பை ஏற்படுத்திக் கொடுப்பதின் மூலமாய் தன் மேசியாத்துவத்தை உறுதிபடுத்துவார் என்று யூதாஸ் நம்பியிருந்தார். ஆனால் காரியங்கள் அப்படி நடைபெறவில்லை.

ஒரு விதத்தில் சீமோனும் துரோகியாக இருந்திருக்கிறார். யூதாஸைக் காட்டிலும் அந்த விஷயத்தில் சீமோன் மிகவும் எதிர்பார்ப்போடு இருந்தார்.

ஆனால், சீமோன் சத்தியத்தை நம்பினார். இஸ்ரவேலைக் குறித்து அவருக்கு இருந்த அந்த பற்றியெறியும் வைராக்கியம் கிறிஸ்துவினிடமாய் திரும்புகிறது.

சீமோன் பிரிட்டிஷ் தீவுகள் எகிப்து, ஆப்பிரிக்கா போன்ற இடங்களில் பிரசங்கித்துள்ளார் என்று திருச்சபைத் தலைவர் யூசிபியஸ் குறிப்பிடுகிறார். அவருடைய பிரசங்கத்தினாலேயே அவர் கடைசியில் இரண்டு துண்டாய் வெட்டப்பட்டார்.

இவர் இஸ்ரவேலின் அரசியல் மாற்றத்திற்காகவும் யூதமார்க்கத்தின் மீது இருந்த அன்பினிமித்தமும் மரிப்பதற்கு ஆயத்தமாயிருந்தார். ஆனால் அதைக்காட்டிலும் மேலாக ஆவிக்குரிய காரியங்களுக்காகவும் கிறிஸ்துவின் மீதிருக்கும் அன்பினிமித்தமும் மரிக்க ஆயத்தமாயிருந்தார்.

## யாக்கோபின் குமாரனான யூதாஸ்

இவருக்கு இந்த பெயர் இடப்பட்டது பரிதாபம்.

அதற்கு "யேகோவா வழிநடத்துகிறார்" என்று அர்த்தம்.

**உங்கள் குழந்தைகளுக்கு எவ்வளவு அழகான பெயர் இது?**

**ஆனால் அதை உங்கள் பிள்ளைகளுக்கு வைக்கமாட்டீர்கள்!**

**ஏன்?**

ஏனென்றால் ஒரு யூதாஸ், இந்த பெயரின் மதிப்பை கெடுத்துவிட்டார்.

ஆனால், இந்த யூதாஸ் நல்லவர்.

இவரைக் குறித்து நமக்கு அதிகம் தெரியாது.

இவருக்கு மூன்று பெயர்கள் இருந்தது.

இவருக்கு மூன்று பெயர்கள் இருந்ததால், ஜெரோம் இவரை "ட்ரினோமினஸ்" என்று அழைக்கிறார்.

**மத்தேயு 10:3, பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு,**

இவர் ததேயு என்றும் லெபேயு என்றும் அழைக்கப்பட்டார்.

- ததேயு
- லெபேயு
- யாக்கோபின் குமாரனான யூதாஸ்

யுதாஸ் என்பது இவருடைய பிறப்பில் இவரின் பெற்றோர்களால் கொடுக்கப்பட்ட பெயர். “யேகோவா வழிநடத்துகிறார்” என்னும் அழகான அர்த்தமுள்ள பெயர் இவருக்கு கொடுக்கப்பட்டது.

ஒரு சிறிய யூத குழந்தைக்கு அதின் பெற்றோர் இப்படி பெயரிடுவது சிறந்த காரியம்.

**ததேயுவின் அர்த்தம்?**

“மார்பகப் பிள்ளை”

எபிரெய மூலவார்த்தையின்படி போஷிக்கும் பெண்ணின் மார்பகங்கள் என்று அர்த்தங்கொள்கிறது.

“அம்மா பிள்ளை” என்று அதை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

**லெபேயுவின் அர்த்தம்?**

எபிரெய வார்த்தையின் அர்த்தம் “இருதயப் பிள்ளை”

சிறிய, மென்மையான இருதயம் கொண்ட, அம்மா பிள்ளை, செலோத்தியனான சீமோனோடு சேர்த்து சுற்றித்திரிந்தார்.

இது மிகவும் சுவாரஸ்யமான ஒன்று.

இவர் இளகிய இருதயம் கொண்டவர், அனுதாபங் கொண்டவர், இரக்கமுள்ளவர், மென்மையானவர், ஆனால் தைரியமானவர்.

**இவ்வளவு மென்மையான நபரை தேவன் பயன்படுத்துவாரா?**

செலோத்தியனையே திறமையான பிரசங்கியாராய் மாற்றமுடியும் என்றால், இளகிய இருதயம் கொண்ட, இரக்கமுள்ள, மென்மையான, இனிமையான, அம்மாபிள்ளையை பயன்படுத்துவது அதிக கடினமில்லை.

அவர்களைக் குறித்து அறியப்படாத தகவல்களை வைத்து அவர்கள் மீதுள்ள மதிப்பை குறைக்க வேண்டாம். அவர்கள் வல்லமையான பிரசியங்கியார்களாக மாறினர். இந்த நபர்கள் பூமியில் தங்களுடைய புகழை ஸ்தாபிக்கவில்லை.

ஆனால் பரலோகத்தின் சேனையை அணிவகுத்து நடத்துகிறார்கள். அவர்களின் தாழ்மையான ஊழியம் மனிதர்களால் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் தேவன் அதை பதித்து வைத்திருக்கிறார். அவர்கள் பரலோகத்தாலும் பரலோக பதிவினாலும் பிரபலமாய் அறியப்பட்டவர்கள்.

இந்த யூதாஸ் ததேயு லெபேயுவைக்குறித்த ஒரு சம்பவம் வேதத்தில் இடம்பெற்றுள்ளது.

**யோவான் 14:19-22 இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள். 20. நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். 21. என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். 22. ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான்.**

இவர் மென்மையான இருதயம் கொண்டவர் என்பதற்கு இது ஆதாரமாயிருக்கிறது. இவர் துணிகரமாகவோ, தைரியமாகவோ அதிக தன்னம்பிக்கையோடோ எதையும் சொல்லவில்லை.

இவர் பேதுருவைப் போல தேவனை எதிர்த்து பேசவோ, கடிந்து கொள்ளவோ இல்லை.

இந்த கேள்வியில் ஒரு மென்மையும், சாந்தமும், இளகிய தன்மையும் உள்ளதை பார்க்க முடியும்.

சுவிசேஷமெங்கிலும் இவரைக்குறித்து பதிவாகியுள்ள ஒரே சம்பவம் இதுவே.

அங்கே மென்மை வெளிப்படுகிறது. நீரே உலக இரட்சகர்; பரிசுத்தமான தேவன். நீர் உம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க இந்த உலகத்திற்கு வந்திருக்கிறீர். நீர் மன்னிப்பையும் இரட்சிப்பையும் குறித்து பிரசங்கிக்கிறீர். அதுவே உலகத்திற்கு நற்செய்தி என்பதை நாங்கள் அறிவோம். எங்களுக்கு அது தெரியும், ஆனால், மற்றவர்களுக்கு அது தெரியாது. ஆகையால் எங்களுக்கு

மட்டும் உம்மை வெளிப்படுத்த தீர்மானித்த நீங்கள் உலகத்திற்கு உம்மை வெளிப்படுத்த மாட்டீரோ?

இவர் பக்தியும் விசுவாசமும் கொண்ட சவுல்.

இவர்கள் தேவனை நேசிக்கிறவர். அத்துடன் இரட்சிப்பின் வல்லமையை தன் வாழ்க்கையில் பார்த்தவர்.

உலகத்திற்கான நம்பிக்கைக்காய் காத்திருந்த, இளகிய இருதயம் கொண்ட, இருதயப்பிள்ளை, அம்மா பிள்ளையின் பாதை இதுவே.

இயேசுவின் பதில் வியப்பூட்டுகிறது!

**யோவான் 14:23-24, இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். 24. என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.**

யூதாஸின் கேள்வியானது இன்னும் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தெரிகிறது.

இயேசு பிரதியுத்திரமாக,

- நான் வெளியரங்கமாய் உலகத்தை ஆளப்போகிறதில்லை.
- நான் இருதயங்களை ஒவ்வொன்றாக தெரிந்தெடுப்பேன்.
- ஒருவன் என்னை நேசித்தால், என் வார்;த்தையைக் கைக்கொள்ளுவான்.
- அவன் என்னுடைய வார்த்தையைக் கைக்கொண்டால் என் பிதா அவன் மீது இரங்குவார்.
- நாங்கள் இணைந்தே இருதயத்தின் ராஜ்யத்தை ஸ்தாபிப்போம்.

வச. 24 வேறொரு பக்கத்தைக் காண்பிக்கிறது.

அப்படியொரு கேள்வியெழுப்பியதற்கு ததேயு யூதாஸிற்கு நாம் என்றென்றைக்கும் கடமைப்பட்டுள்ளோம்.

பாரம்பரிய சரித்திர பதிவின்படி, இவர் தன் அப்போஸ்தல ஊழியம் மூலமாகவும் பிரசங்கத்தின் மூலமாகவும் பல்வேறு வியாதியிலிருந்து மக்களுக்கு சுகம் கொடுத்துள்ளார். அவ்வாறு பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, ஒரு

தருணத்தில் ***சீரியாவின் ராஜாவாயிருந்த அட்கர்*** என்பவரை அவருடைய வியாதியிலிருந்து சுகம் பெறச் செய்ததாக சரித்திர பதிவுகள் உள்ளது.

யாக்கோபின் குமாரனாகிய யூதாஸினால் சுகம் பெற்ற இந்த மனிதன் பக்தியுள்ள கிறிஸ்தவனாய் மாறினார். அதினிமித்தம் அவருடைய உறவினர் ஒருவன் யாகோபின் குமாரனாகிய யூதாஸ் ததேயு லெபேயுவை கொலை செய்தான்.

இவர் அம்மாபிள்ளையாய் இருந்திருக்கலாம், ஆனால் மிகவும் தைரியமானவர். மென்மையான நபர்களை தரக்குறைவாய் மதிப்பிட வேண்டாம்.

வரலாற்றைப் பார்த்தால் இந்த அப்போஸ்தலரை அடையாளப்படுத்தும் ஓர் அடையாளச் சின்னம் கொடுக்கப்பட்டுள்ளது. சில பழைய வரலாற்று பதிவுகளில் நீங்கள் பார்த்தால், யாக்கோபின் குமாரனாகிய யூதாவின் பெயரோடு, ஒரு பெரிய மட்டை ஒன்று இடம்பெற்றிருக்கும். அந்த மட்டையைக் கொண்டுதான் இவர் கொலைசெய்யப்பட்டார் என்பதை அடையாளப்படுத்துவதற்காக அப்படி செய்வர்.

**தேவன் எப்படிப்பட்ட மக்களை பயன்படுத்துவார்?**

எப்பேற்பட்ட நபர்களையெல்லாம் நீங்கள் கற்பனை செய்கிறீர்களோ, அவர்களை அழைத்து, அவர்களின் குழப்பங்களிலிருந்து அவர்களை தெளிவாக்கி, உயர்ந்த அழைப்புக்கு தேவன் அவர்களை பாத்திரவான்களாக்குகிறார்.